Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu




ஹஸ்ரத் முஹைறயுதின் அல்-
கலீபஃத்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஜீம் (AS)

22 August 2018
(10 Dhul-Hijjah 1439 AH)

மொழியாக்கம்/Translation
TJSI பத்திரிகை குழுமம்- TJSI publication group
வெளியீட்டு
அமீர்,
ஜமாஅத் தமிழ்நாடு

PHONE:+917502272774
EMAIL:jusai.tn@gmail.com

# ஜுமுஆ பேருரை

## தலைப்பு :

# "தியாகம் மற்றும் ஹஜ்'

## ஈத்-உல்-அல்ஹா பேருரை

بسم الله الرحمن الرحيم

உலகெங்கிலும் உள்ள தனது அனைத்து ஸஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினையும், மற்றும் **ஈத் முபாரக்** வாழ்த்துக்களையும், தெரிவித்த பிறகு ஹஸ்ரத் கலீபத்துல்லாஹ் (அலை) அவர்கள் தஷ்ஹுத் தஅவூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதி "**தியாகம் மற்றும் ஹஜ்**' என்ற தலைப்பில் **ஜுமுஆ பேருரையை** தொடர்ந்தார்கள்,

அதாவது, ஒவ்வொரு மார்க்கத்திலும் குறிப்பிட்ட சில மத பண்டிகைகள் உள்ளன. அவை தான் ஒரு மார்க்கத்தின் அணிகலன்களாகவும், பிறகு அதுவே ஒரு மார்க்கத்தின் முக்கிய முகமாகவும் மாறிவிடுகின்றது. மேலும், மார்க்கத்தில் ஒருவர் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றால், அவர் இவ்வாறான மத பண்டிகைகளை மதிப்பது என்பது மிகவும் அவசியமானதாகும். மேலும், இஸ்லாம் என்பது ஈத்-உல்-பித்ர் மற்றும் ஈத்-உல்-அல்ஹா என்று வருடத்தின் இரண்டு பெருநாட்களை மத பண்டிகைகளாக கொண்டாடப்படும் ஒரு மார்க்கமாகும். மேலும் இத்தகைய பண்டிகைகள் இதர மார்க்கங்களை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும் ஏனெனில் இது தியாகத்தின் அடைப்படையிலான கொண்டாட்டங்களாகும்.

மேலும், இந்த இரு பெருநாட்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு சிறப்பு தொழுகை உள்ளது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். மேலும் உண்மையில், அல்லாஹ்வின் தூதர் ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருவதற்கு முன்னர், அங்குள்ள மக்கள் வருடத்தில் வேறு இரண்டு நாட்களையே பெருநாட்களாக கொண்டாடி வந்தனர். மேலும், அன்னார் மதீனாவிற்கு வந்ததற்கு பிறகு கூறுகினார்கள், "நீங்கள் வீணாக விளையாடி கழிக்கும் இரண்டு நாட்கள் உங்களுக்கு உள்ளன",ஆனால் அல்லாஹ் சுபஹானஹு தஆலா, முஸ்லிம்களுக்கு அவற்றை விட மகச் சிறந்ததை, அதற்கு பதிலாக வழங்கியுள்ளான். அதுவே, ஈத்-உல்-பித்ர் மற்றும் ஈத்-உல்-அல்ஹா நாட்களாகும்". (நஸாயி).

அதாவது, இவ்விரு பெருநாட்கள் மட்டுமே இஸ்லாமியக் காலண்டரில் உள்ள ஒரே பண்டிகைகளாகும். மேலும், இந்த இரண்டு பெருநாள் கொண்டாட்டங்களும், ஒரு சிறப்பு தொழுகையை தன்னுள் ஒவ்வொன்றும் உள்ளடக்கியுள்ளது. ஆகவே, முஸ்லீம்கள் தங்கள் மீது இறைவன் பொழிந்துள்ள அவனது அனைத்து அருள்களுக்கும் நன்றி செலுத்தும் விதமாக, தங்களது பண்டிகைகளை அதிக பிரார்த்தனையுடனும், உற்சாகத்துடனும் கொண்டாடி வருகின்றனர் . ஆகவே, இத்தகைய கூடுதலாக செய்யும் ஒரு பிரார்த்தனையின் மூலமாகவே, முஸ்லிம்கள் தங்களுடைய படைப்பாளனுக்கு நன்றி செலுத்தி, தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

மேலும், ஈத்-உல்-அல்ஹா தினத்தில், அல்லாஹ்வின் பெயரால் ஒரு பிராணியை தியாகம் செய்வதன் மூலமும், ஒருவர் தனது இறைவனுக்கு நன்றி செலுத்தவும், ஏழைகளிடம் பெருந்தன்மையுடனும் நடந்துக் கொள்கின்றார்.

மேலும், "குர்பானி" என்ற சொல் "அல்-குர்பான்" என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. அதன் பொருளாவது, 'ஒவ்வொரு வேலையும் இறைநெருக்கத்தை பெறுவதற்கு வழிவகுக்கும்' என்பதாகும்.இவ்வாறு, ஒவ்வொரு **மார்க்க பணியையும் குறிப்பாக**, தியாகங்களை 'குர்பா' என்றும், அல்லது புனிதப் பணி என்றும் அழைக்கப்படுகின்றது.

**எல்லாம் வல்ல இறைவன் கூறியதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவிக்கின்றார்கள், "என்னுடைய அடியான், நான் அவனுக்கு என்னுடைய கருணையைக் காட்டும் வரை, அவன் கூடுதலான வணக்க வழிபாடுகளைச் செய்வதன் மூலமாக, அவன் என்னை தொடர்ந்து நெருங்குகின்றான். இதனால், நான் அவனுடைய கேட்கும் காதுகளாகவும், மற்றும் பார்க்கும் கண்களாகவுமே மாறிவிடுகின்றேன். மேலும், அவன் என்னிடம் எதையாவது வேண்டினால், நான் அவனுக்கு அதனை வழங்குகின்றேன். மேலும், அவன் என்னிடம் பாதுகாப்பை நாடினால், நான் அவனுக்கு பாதுகாப்பளிக்கின்றேன்" (புஹாரி).**

மேலும் கூறுவதாக இருந்தால், இத்தகைய ஈத்-உல்-அல்ஹா நாளே, இப்ராஹிம் (அலை) அவர்கள் தனது இறைவனுக்கு செய்த தியாகங்களைக் குறித்து நம்மை சிந்திக்க வைக்க வழிவகுப்பதாக உள்ளது. அதாவது, ஹிஜ்ரத்தில் ஏற்பட்ட துன்பங்கள், நெருப்பில் எறியப்படுதல், மற்றும் குடும்பத்திலுள்ள மற்றவர்களிடையே இருந்து அன்னார் பிரிக்கப்படுதல் போன்ற தியாகங்களாக இது அமைந்துள்ளது. அன்றியும், எல்லாவற்றுக்கும் மேலாக, எல்லாம் வல்ல இறைவன், அன்னாருடைய மகனான இஸ்மாயில் (அலை) அவர்களை, அவர்களிடம் பலியிடும் படியும் கட்டளையிட்டான். அன்னாரும் இறை கட்டளைக்கு அடிபணிந்து, அவர்களுடைய மகனின் தொண்டையை அறுப்பதற்காக தனது மகனின் கழுத்தில் கத்தியை வைத்தார்கள் **மாறாக,** ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை) அவர்களை பலியிட தேவையில்லை என்று எல்லாம் வல்ல அல்லாஹ்வால் ஆணையிடப்பட்டது.மேலும், இந்த மனித தியாகத்திற்கு பதிலாக, ஒரு ஆட்டை தியாகம் செய்வதாகவும் இது மாற்றி அமைக்கப்பட்டது. இதன் மூலம், எல்லாம் வல்ல அல்லாஹ், முஸ்லிம்களை சக கிறிஸ்தவ, யூதர்களுடனும் ஒப்பிடும்போது, நன்மைகளால் நிரப்பவேண்டும் என்று விரும்பினான். இதன் காரணமாகவே, **நபிகள் நாயகம் (ஸல்)** அவர்களுடைய மேன்மையான ஆன்மீக தந்தையாரும், மற்றும் பௌதீக மூதாதயருமான இஸ்மாயில் (அலை) அவர்களை கட்டாயமாக பலியிடவேண்டியதாக இருந்தது.

மேலும், பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள், "நான் பலியிடப்பட்ட இரண்டு பேரின் மகனாவேன்" என்றார்கள். அதாவது அவர்கள், அரேபியர்களுடைய தந்தையரான இப்ராஹீம் (அலை) அவர்களின் மூத்த மகனாகிய இஸ்மாயில் (அலை) அவர்களையும், மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயிரியல் தந்தையான, அப்துல்லாஹ் அவர்களையுமே சுட்டிக் காட்டினார்கள். மேலும், அவர்கள் இருவருமே பலியிடப்படுவதாக இருந்தனர்.

மேலும், இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாக உணர்வை நினைவு கூர்ந்து, அதற்கு புத்துயிர் வழங்குவதற்காக,ஒவ்வொரு வருடமும் **ஈத்-உல்-அல்ஹா** தினங்களில் கால்நடைகள் பலியிடப்படுகின்றன.அதாவது, துல்-ஹஜ் மாதம் 10 வது நாள் கால்நடைகளை பலியிடுவது என்பது இஸ்லாத்தின் மிக முக்கியமான அடையாளமாக உள்ளது. இதனைக் குறித்து எல்லாம் வ`ல்ல அல்லாஹ் கூறுகின்றான்:

**"இன்னும் (குர்பானிக்கான) ஒட்டகங்கள், மற்றும் கால்நடைகள்; அவற்றை உங்களுக்காகஅல்லாஹ்வின் அடையாளங்களிலிருந்தும் நாம் ஆக்கியிருக்கிறோம்" (அல்-ஹஜ் 22:36)**

மேலும், பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நஹ்ருடைய (துல்ஹஜ் பத்தாவது) நாளில் [ஆதமின் மகனால்] செய்யப்படும் எந்தவொரு செயலும் அல்லாஹ்விடத்தில் (உலுஹியாவை பலியிடுவதனால்) சிந்தப்படும் இரத்தத்தை விட மிகவும் பிரியமானதாக இருக்காது". (திர்மிதி).

மேலும், திருக்குர்ஆனின் ஸூரா 'அல் கவ்ஸர்' என்ற அத்தியாத்தின் இவ்வசனத்திலிருந்து, குர்பானி, அல்லது உலுஹியா என்பது எல்லா முஸ்லிம்களுக்கும் மிகவும் முக்கியமான கடமையாக உள்ளது என்பதனை விளங்க முடிகின்றது. அவ்வசனம் இவ்வாறு வருகின்றது: **"எனவே, நீர் உமது இறைவனை தொழுது, குர்பானியும் கொடுப்பீராக. (அல் கவ்ஸர்: 108:3)**

மேலும், இந்த வசனம் வெவ்வேறான நிறங்களையும், மற்றும் விளக்கங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. இவ்வசனத்திலிருந்து, தொழுகையைப் போன்று தான் தியாகம் என்ற கட்டளையும் மற்றும் குர்பானி அல்லது உலுஹியாவை நிறைவேற்றுவது ஒரு கால்நடையை பலியிடுவதன் மூலமாக என்பதும் மிக முக்கியமான கடமையாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.உண்மையில், ஈத்-அல்-அல்ஹா அமல்களை நிறைவேற்றுவதன் வரிசையில், முதலில் தொழுகையை செயல்படுத்திய பின்னரே, தியாகம் என்ற பலியிடுதலை நிறைவேற்ற வேண்டும் என்றே பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விளக்கப்படுகின்றது: **"நம்முடைய தொழுகையைத் தொழுது, அதன் பிறகு நாம் குர்பானியை கொடுப்பது"** போன்று, கொடுப்பவரே உண்மையில் குர்பானி கொடுப்பவராவார். தொழுகைக்கு முன்பே அறுத்து விடுகிறவர் தொழுகைக்கு முன் (தமக்காக) அறுத்தவராவார். குர்பானி கொடுத்தவரல்லர்". என்று குறிப்பிட்டார்கள். (புஹாரி).

மேலும், இப்னு மாஜாவின் நம்பகத்தகுந்த ஹதீஸிலிருந்து கூறப்படுவது என்னவெனில், பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அபு ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: " மேலும், ஒருவருக்கு குர்பானியை நிறைவேற்றுவதற்கான வழிமுறை இருந்தும், அவர் அதற்கான ஏற்பாடுகளை செய்யாமல் இருக்கும் பட்சத்தில், அவர் நம்முடைய முஸல்லாவை நெருங்கத் தேவையில்லை. (அதாவது, அவர் ஈத்-ல்-அல்ஹா தொழுகையை நிறைவேற்றுவதற்கு நம்முடன் வந்து நிற்கக்கூடாது)" என்பதாகும்.

ஆகவே, குர்பானியின் கடமையை நிறைவேற்றுவது என்பது தொழுகையுடைய அதே நிலையை நிறைவேற்றுவதை போன்றதாகும். மேலும் கூறுவதாக இருந்தால், குர்பானியை நிறைவேற்றுவதற்கான வழிமுறை உள்ள ஒவ்வொரு தனிநபரும், அதற்கான ஒரு பங்கை கட்டாயமாக வழங்க வேண்டும். மேலும், புஹாரியின் நபிமொழியில் இருந்து மேற்கோள் காட்டப்படுவதாவது, ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் கேட்டதாக நபித்தோழர் ஹஸ்ரத் அபு புர்தா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

"இறைத்தூதர் அவர்களே! இன்றைய தினம் உண்ணுவதற்கும் பருகுவதற்கும் உரிய தினமாகும் என்று விளங்கி நான் தொழுகைக்கு முன்பே என் ஆட்டை அறுத்துவிட்டேன். எனவே, நான் தொழுகைக்கு வருவதற்கு முன்பே என் ஆட்டை அறுத்து (அதையே) காலை உணவாகவும் உட்கொண்டேன்' என்றார்கள். அப்போது நபி (ஸல்) 'உம்முடைய ஆடு மாமிசத்திற்காக அறுக்கப்பட்ட ஆடாகத்தான் கருதப்படும்" என்று கூறினார்கள். மேலும், நபி பெருமானார்(ஸல்) அவர்கள், அன்னாரிடம் குர்பானியை மீண்டும் நிறைவேற்றுவதற்கும் கட்டளையிட்டார்கள்.எனவே குர்பானி என்பது பிரயாணியாக இல்லாதவர்கள், பருவ வயதை அடைந்தவர்கள், மற்றும் குர்பானியை நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளவர்கள் ஆகிய அனைவர்க்கும் வாஜிபாகவும், மற்றும் கடமையாகவும் உள்ள ஒன்றாகும்.

மேலும், முஸ்தத்ரக் ஹக்கீம் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தனது மகள் பாத்திமாவை அவளுடைய குர்பானிக்கு சாட்சியாக இருக்குமாறு வலியுறுத்தி கூறி உள்ளார்கள்.மேலும், ஈத்-ல்-அல்ஹா நாளில், ஹஸ்ரத் நபி பெருமானார்(ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் சார்பாக ஒரு மாட்டை பலியிட்டார்கள். ((முஸ்லிம்).

இந்நிலையில், இந்த **ஈத்-உல்-அல்ஹா** நாளில், மக்காவிற்கு புனித யாத்திரை செல்ல அல்லாஹ்வை நேசிப்பவர்களாலும் மற்றும் ஹஸ்ரத் நபி கரீம் முஹம்மது முஸ்த஼பா (ஸல்) அவர்களை நேசிப்பவர்களாலும் ஆகிய பலராலும் முடியவில்லை என்பது மிகுந்த மனவருத்தத்தை அளிக்கின்றது. ஏனென்றால் இறைவனுடைய இல்லமானது யாருடைய தனி சொத்தும் அல்ல. மேலும், மனிதர்களுடைய சட்டத்தின்படி, வாக்களிக்கப்பட்ட மஸீஹான ஹஸ்ரத் மிர்சா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் அனைவரும் முஸ்லிம் அல்லாதவர்கள் என்றும், மக்காவிற்கு புனித யாத்திரை செல்ல அவர்கள் அனுமதிக்கக்கப்படாதவர்கள் என்றும் கருதப்படுகின்றனர். இன்னும் அவர்களைப் பொறுத்தவரை, நாம் மக்கா-மதீனாவிற்கு ஹஜ் மற்றும் உம்ரா செல்வதால் இத்தகைய மார்க்க ஸ்தலங்கள் அவமானத்திற்கு உள்ளாக்கப்படுவதாக கருதுகின்றனர்.

மேலும், இந்தியப் பெருங்கடலின் சிறிய தீவான மொரீஷியஸில், ஹஜ் பயணம் மேற்கொள்ள வேண்டுமெனில், நீங்கள் எந்த ஜமாஅத்தைச் சேர்ந்தவர் என்பதை அறிவதற்கு, நீங்கள் அந்த குறிப்பிட்ட ஜமாஅத்தின் இமாமால் கையெழுத்திடப்பட்ட ஒரு படிவத்தை நிரப்பவேண்டும். இது சம்பந்தமாக நான் அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் வழங்கும் ஒரு சிறிய அறிவுரை என்னவெனில், இஸ்லாத்தின் ஐந்தாவது தூணான ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கு, **வாக்களிக்கப்பட்ட மஸீஹான ஹஸ்ரத் மிர்சா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தைக் குறித்து பொய் சொல்லவோ அல்லது உங்களுடைய நம்பிக்கையை விட்டுக் கொடுக்கவோ ஒருபோதும் கூடாது**. அன்றியும், இஸ்லாத்தின் சிறந்த பாதுகாவலர்கள் என்று தன்னை அழைப்பவர்கள், இஸ்லாத்தின் ஐந்தாவது தூணான ஹஜ்ஜை நிறைவேற்றுவதிலிருந்து அல்லாஹ்வின் அடியார்களை தடுக்கின்ற அந்த பாவத்தை தங்களுடைய தோள்களில் சுமந்து கொள்ளட்டும். மேலும் இஸ்லாம் கூறாத வழியில் செயல்படும் இவர்கள் தங்களை இஸ்லாத்தின் பாதுகாவலர்கள் என்று அழைத்துக்கொள்வது மிகவும் துரதிர்ஷ்டவசமாக உள்ளது. இன்னும் விசித்திரம் என்னவென்றால், இங்கு மொரீஷியஸில், உங்களது புனித பயணத்திற்கான படிவம் முதலில், நான் உங்களுக்கு மேற்குறிய பெயர்தாங்கிய ஆலிம்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் இஸ்லாமிய மையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு, பிறகு இந்த முல்லாக்கள் விண்ணப்பம்

செய்த நீங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விசுவாசிகளா என்பதை பரிசோதிக்க ஆலோசனைக் கூட்டத்திற்குள் ஆலோசனை செய்த பின் நீங்கள் அன்னாரை ஏற்றுக்கொண்டவராக இருந்தால், உங்களுடைய படிவமும் மற்றும் மக்காவிற்கு செல்லும் விசாவிற்கான உங்களுடைய விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். மேலும் இதே யுக்தியையே, உலகெங்கிலும் உள்ள அனைத்து நாடுகளாலும் பயன்படுத்தப்படுகின்றது.

ஆகவே, எல்லாம் வல்ல அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் **நபிகள் நாயகம் (ஸல்)** அவர்களை நேசிப்பவர்களே! நீங்கள் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அல்லாஹ்வின் தனித்தன்மையை கற்றுக்கொண்டவர்களாக உள்ளீர்கள்!, நீங்கள் அல்லாஹ்வின் பண்புகளையும் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டவர்களாக உள்ளீர்கள்!! நீங்கள் அன்னாரின் மூலமாக ஆன்மீக பயிற்சிகளை கற்றுக் கொண்டவர்களாகவும் உள்ளீர்கள்!!! இன்னும் **நான் உங்களுக்கு உறுதியாகவும், சத்தியம் செய்தும் கூறுகின்றேன்**. அவர்களின் பழிவாங்கும் செயல்களுக்கு பயந்து மக்காவிற்கு ஹஜ் யாத்திரை செல்ல நீங்கள் தடை செய்யப்பட்டிருக்கும் வரை, அல்லாஹ்விற்காக, உங்களுடைய **புனித யாத்திரை ஏற்றுக்கொள்ளப்படும்! ஏற்றுக் கொள்ளப்படும்!! ஏற்றுக்கொள்ளப்படும்!!!** என்றே கூறுகின்றேன்.

மேலும், இவ்வாறு புனித யாத்திரைக்கு செல்ல முடியாத (மறுக்கப்படுவதால்) ஹாஜிகளே!, நான் என்னுடைய பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன் அத்துடன் என்னுடைய ஈத்-உல்-அல்ஹா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், என்னுடைய வாழ்த்துக்களை உலகெங்கும் வாழும் என்னுடைய ஸஹாபா தோழர்களுக்கும், குறிப்பாக **கேரளா, தமிழ்நாடு, டெல்லி, சென்னை, அபுதாபி, துபாய், கொமோரோஸ், மயோட்டே, மலேசியா, இந்தோனேசியா, ரீயூனியன், மடகாஸ்கர் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

மேலும், **நான் இந்த நற்செய்தியையும் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். அதாவது, அல்லாஹ் நமக்கு சுவனத்திற்கான வழிகளை திறந்துவிட்டிருப்பதுடன், மிக விரைவில் இறை தீர்மானத்தின் மூலம் இவ்வுலகின் அனைத்து திட்டங்களும் முறியடிக்கப்படும் என்பதும் உங்களுக்கு காட்டப்படும்**. **அன்றியும், அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதுள்ள நேசத்தின் காரணமாக, நிறைந்த உள்ளத்துடன் மக்காவிற்கு புனித யாத்திரை செல்வதற்கான உங்களுடைய ஆழமான விருப்பமும் நிறைவேற அல்லாஹ்வின் அருளால் உங்களுக்கு அனுமதி வழங்கப்படும். ( இன்ஷா அல்லாஹ்)**

மேலும், உங்களிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி இது தான்: அதாவது, இஸ்லாமிய நம்பிக்கை மற்றும் நடைமுறையின் அடிப்படையில், பெயரளவில் மட்டுமே முஸ்லிமாக இருப்பவர்களிலிருந்து நம்பகத்தகுந்தவர்களையும் மற்றும் பொய்யர்களிலிருந்து உண்மையான முஸ்லிம்களையும் எவ்வாறு கண்டறிவது? என்பதாகும்.

மேலும், நம்முடைய எஜமானனும், ஒரே நீதிபதியுமான அல்லாஹ்வை தவிர வேறு யார் இதனை தீர்மானிக்க முடியும்? அதாவது, மார்க்க விஷயங்கள் என்பது மனிதனுக்கும், அவனுடைய படைப்பாளனான எல்லாம் வல்ல இறைவனுக்கும் இடையில் தீர்மானிக்கப்படும் ஒன்றாகும். இன்னும் கூறுவதாக இருந்தால், ஒரு மனிதனாக, ஒரு சக மனிதனின் நம்பிக்கை என்னவாக இருக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கவும் மேலும் அவர்களின் நம்பிக்கையை குறித்து முடிவு செய்யவும் நமக்கு நிச்சயமாக எந்த அதிகாரமோ, உரிமையோ இல்லை என்பதாக இருக்கும்போது, எங்களை நீங்கள் முஸ்லிமல்லாதவர்கள் என்று முத்திரை குத்தப்படுவதைப் குறித்து எங்களுக்கு எந்த கவலையும் இல்லை. மேலும், நாங்கள் தான் சரியானவர்கள் என்று எந்த அரசாங்கத்திடமிருந்தும், அல்லது எந்த சட்டமன்றத்திலிருந்தும் எங்களுக்கு எந்த சான்றும் தேவையில்லை மாறாக அல்லாஹ்வின் பார்வையில் மட்டும் முஸ்லிம்களாக இருந்தால், அதுவே எங்களுக்கு போதுமானதாகும்.

**மேலும், இறை வழிப்பாட்டிற்காக அமைக்கப்பட்ட முதல் இல்லம் கஅபாவாகும். இது மதம், நிறம், மற்றும் இனம் என்ற வேறுபாடு இல்லாமல் மனிதர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு இல்லமாகும்.** அன்றியும், இந்த அருளுக்குரிய இல்லத்திலிருந்து, மனிதர்கள் எண்ணற்ற நன்மைகளைப் பெறுவதுடன், இது மனித குலத்திற்கு அதன் நோக்கு நிலைக்காகவும் மற்றும் அதன் ஆன்மாவின் அமைதிக்காக்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒன்றாக உள்ளது. மேலும், அங்கு செல்ல சக்தி பெற்றவர்கள், இறைவனின் பெயரால் அங்கு சென்று ஹஜ் யாத்திரை செய்யவேண்டும். இதுவே, இஸ்லாமிய நம்பிக்கையாளர்களுக்கு திருக்குர்ஆன் விதித்த உத்தரவாகும். **இன்று நாம் இந்த நடைமுறையிலிருந்து விலக்கப்பட்டுள்ளோம்.** அதாவது, இவ்விடத்தில் எழும் கேள்வியாவது: **எப்போதிலிருந்து எல்லாம் வல்ல அல்லாஹ் தன்னுடைய உத்தரவான அனைத்து மனிதர்களும் வேறுபாடின்றி கஅபாவை நெருங்க அனுமதிக்கப்படுகின்றனர் என்பதை விலக்கியுள்ளான்? அன்றியும் இத்தகைய அதிகாரங்களின் உரிமையை இவர்களுக்கு வழங்கியவர் யார் (அல்லாஹ்வுக்கு மட்டுமே அனைத்து அதிகாரங்களும் உரியன)? அதாவது கஅபா என்பது இறைவனுடைய இல்லம் அது யாருடைய தனிப்பட்ட சொத்தும் இல்லை.**

மேலும், புனித திருக்குர்ஆனில் உள்ள ஸூரா அல்-பக்கராவின் 115 வது வசனமும், ஸூரா அத்-தவ்பாவின் 19 வது வசனமும் முறையே, "**கஅபாவைப்"** பற்றி இந்த வசனங்கள் பேசுகின்றன:

**மேலும், "அல்லாஹ்வின் பள்ளிகளில் அவனுடைய பெயர் கூறப்படுவதைத் தடுத்து, அவற்றை பாழாக்க முயல்பவனை விட மிகப் பெரிய அநியாயக்காரன் எவன்? அவர்கள் அச்சத்துடனன்றி அவற்றில் நுழைவது முறையானதன்று. அவர்களுக்கு இவ்வுலகில் இழிவு உள்ளது. மறுமையிலும் அவர்களுக்குப் பெருந் தண்டனை உள்ளது.**
**(அல் பக்கரா 2:115)**

**"ஹஜ்ஜூ செய்பவர்களுக்குத் தண்ணீர் வழங்குதல், தூய பள்ளியை பராமரித்தல் ஆகியவற்றை, அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்தவர்க(ளின் பணிக)ளைப் போன்றதாக நீங்கள் கருதிக் கொண்டீர்களா? இவர்கள் (இரு சாராரும்) அல்லாஹ்விடத்தில் (ஒருபோதும்) சமமானவர்கள் இல்லை. அநீதி இழைக்கும் சமுதாயத்தினர்களுக்கு அல்லாஹ் ஒரு போதும் வழி காட்டமாட்டான்". (அத்-தவ்பா 9: 19).**

மேலும், புனித திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் போதனைகளுடைய ஒளியில் உங்களுடைய மனசாட்சியை ஆராய வேண்டிய கட்டாயத்திலும் நீங்கள் உள்ளீர்கள். மேலும், உங்களுடைய ஆன்மாவின் ஆழத்தில் ஒரு சிறிய இழை ஒளி உங்களிடம் ஒட்டி இருக்குமானால் **உண்மையான முஸ்லிமாக உள்ளவர் யார்?** என்பதையும் **பெயரளவில் மட்டும் முஸ்லிமாக உள்ளவர் யார்?** என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

மேலும், நீங்கள் **இறைவனுடைய இல்லத்திற்கு ஹஜ் செல்வதிலிருந்து எங்களை தடைசெய்வதை தொடர்ந்தால்,அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எதிரிகளால் கடைப்பிடிக்கப்பட்ட பாதையை நீங்கள் பின்பற்றும் உங்களுடைய செயல்கள் உங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருப்பதாக இருந்தால், நீங்கள் மிகவும் துரதிர்ஷ்டமானதையே செய்துக்கொண்டிருக்கின்றீர்கள் என்றுதான் கூறவேண்டும்.** ஆனால் **எங்களைப் பொறுத்தவரை, அல்லாஹ் மற்றும் அவனுடைய நபி எங்களுக்கு போதுமானவர்களாக உள்ளனர்.** மேலும், நீங்கள் விரும்பும் அளவுக்கு இதனை தடை செய்தாலும், அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் மீதும் மக்கா-மதீனாவின் மீதும் எங்களுக்கு உள்ள அன்பை நீங்கள் ஒருபோதும் எங்களுடைய இதயங்களிலிருந்து அகற்றிவிடமுடியாது. இன்னும் இந்த அன்பு எங்களுடைய உள்ளங்களில் முழுவதுமாக நிரம்பியுள்ளது. **உறுதியாக இத்தகைய தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டு, நாங்கள் மக்காவிற்குள் வரவேற்கப்படும் ஒரு நாள் வரும் என்பதிலும் நிச்சயமாக நாங்கள் நம்பிக்கைக் கொள்கின்றோம்.**

## இன்ஷா-அல்லாஹ். அமீன்.

**உங்கள் அனைவருக்கும் மாநில அமைப்பு மற்றும் பத்திரிகைத்துறையின் சார்பாக ஈத் பெருநாள் வாழ்த்துக்கள்**

